# சிவப்பிரகாசர் காட்டும் பக்திநெறி

# Devotional Ethics Shown by Sivaprakasar

***முனைவர் வை. கார்த்திக்***
*உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
*அண்ணாமலை நகர்*

**Dr. V. Karthik**
*Assistant Professor*
*Department of Tamil, Annamalai University*
*Annamalai Nagar*

***ம. சித்ரா***
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
*அண்ணாமலை நகர்*

**M. Chitra**
*Ph.D. Scholar, Department of Tamil*
*Annamalai University, Annamalai Nagar*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ்மொழியில் வீரசைவக் கருத்துகளை எடுத்துரைக்கும் காப்பியமாகத் திகழ்வது சிவப்பிரகாசரின் நூல்களுள் ஒன்றான "பிரபுலிங்க லீலை" ஆகும். இந்நூல் கற்பனை நயமும் கவிச்சுவையும் வாய்ந்தது. வீரசைவ உண்மைகளை விளக்க எழுந்த நூலெனினும் நாடு, மொழி, இனம் கடந்து உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் அறக்கருத்துகளையும், ஒழுக்க நெறிகளையும் உணர்த்துகின்ற வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இக்காப்பியத்தில் சிவப்பிரகாசர் காட்டும் பக்திநெறி அனைவரும் உணர்ந்து போற்றத்தக்க பொதுநெறி ஆகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *சிவப்பிரகாசர், பிரபுலிங்க லீலை, வீரசைவம், சைவ சமயம், திருமூலர்*

**Abstract**

*'Prabhulinga Leelai', one of the books of Sivaprakasar, is an epic that deals with Veerashaiva ideas in Tamil language. This book is imaginative and poetic. Although it is a book to explain the truths of Veerashaiva, this book is intended to convey the ethical ideas and moral values that apply to all the people of the world irrespective of their country, language and ethnicity. In this epic, the devotional path shown by Sivaprakasar is a common principle that is admired and admired by all.*

***Keywords***: *Sivaprakasar, Prabhulinga Leelai, Veerashaivam, Saivism, Thirumoolar*

**Citation**

Karthik, V., and M. Chitra. "Devotional Ethics Shown by Sivaprakasar." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 30–35.
DOI: *https://doi.org/10.5281/zenodo.20135872*

**முன்னுரை**

*தமிழ்மொழியில் வீரசைவக் கருத்துகளை எடுத்துரைக்கும் காப்பியமாகத் திகழ்வது சிவப்பிரகாசரின் நூல்களுள் ஒன்றான 'பிரபுலிங்க லீலை' ஆகும். இந்நூல் கற்பனை நயமும் கவிச்சுவையும் வாய்ந்தது. வீரசைவ உண்மைகளை விளக்க எழுந்த நூலெனினும் நாடு, மொழி, இனம் கடந்து உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் அறக்கருத்துகளையும், ஒழுக்க நெறிகளையும் உணர்த்துகின்ற வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இக்காப்பியத்தில் சிவப்பிரகாசர் காட்டும் பக்திநெறி அனைவரும் உணர்ந்து போற்றத்தக்க பொதுநெறி ஆகும்.*

**நூலமைப்பு**

*இறைவனது திருவிளையாடல்களைக் கூறும் காப்பியமாதலின் 'பிரபுலிங்க லீலை' என்ற பெயரையுடையது. ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானே உயிர்களுக்கு மெய்யறிவை உணர்த்தும் பொருட்டு அல்லமப்பிரபுவாகப் பிறக்கிறார். இதனை,*

***"நாம்பார்க் குழவி ஆகாமல் நம்பாற் குழவி ஆயினான்" (பிரபுலிங்க லீலை, 6.34)***

***"எமதுமெய் வடித்தானே அல்லமநாம மைந்தன் ஆயினம்" (பிரபுலிங்க லீலை, 2.54)***

*என்று குறிப்பிடுகிறார். இக்காப்பியத்தில் காப்பியத் தலைவர் அல்லமருக்கும் மாயைக்கும் நடக்கும் போராட்டமும், இறுதியில் பேரறிவுப் பொருளாகிய அல்லமர் மாயையை வென்று உயிர்களுக்கு மெய்யறிவை உணர்த்தி வீடுபேறு அளித்தலும் ஆகிய செய்திகள் இடம் பெறுகின்றன.*

**இறைவனின் இயல்பு**

*சைவ சமயம் குறிப்பிடும் மெய்ப்பொருட்கள் மூன்றனுள் தலைவனான இறைவன் கங்கையையும், பிறையையும் சூடிய சடாமுடியை உடையவன், 'வெள்ள வேணிப் பெருந்தகை' என்றும், 'தண்ணிலவு புனை சடிலத்து' என்றும் குறிப்பிடப்படும் சிவன் உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டவன், இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிப் பிறரால் அறியப்படாத பேரறிவாளன்.*

***"தன்னைத் தானலாதறிதரப் பாடாதான்" (பிரபுலிங்க லீலை, 5.91)***

*என்பர். பிரமனும், நான்மகனும் அறிய முற்பட்ட போது அறிய முடியாத பேரொளிப் பிழம்பாக நின்றவன். எனினும், அன்போடு உள்ளம் உருகும் அடியாருக்கு அவர் வேண்டும் வடிவில் தோன்றும் எளியவன்.*

***"மாலும்நான் முகனுநா டரிய வள்ளல்***
***ஆலமார் மிடற்றினோ னன்பர் வேண்டிய***
***கோலமாய் நாணுகுமீ துண்மைக் கூற்று" (பிரபுலிங்க லீலை, 3.72)***

*என்கிறார் ஆசிரியர். இறைவனின் இத்தகு இயல்பை,*

***"அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி***
***என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (திருமந்திரம். 1:11:3)***

*என்று திருமூலரும் குறிப்பிடுகிறார். உயிர்கள் மீது நீங்காத கருணையுடையவன், உயிர்களை மேன்மையுறச் செய்தவன் பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்பவன்.*

**வழிபடும் முறை**

*உயிர் பிறவியாகிய துன்பத்தைக் கடக்க இறையருளால் இறைவனை வழிபடுதல் வேண்டும். வழிபாட்டால் அனைத்தையம் அடையலாம்.*

***"சித்தியும் ஆயுளுஞ் சிறப்புங் காமிய***
***புத்தியர் அடைவரப் புத்தி நீங்கினோர்***
***முத்தியை அடைவரெம் முதல்வன் பூசையால்" (பிரபுலிங்க லீலை, 7.9)***

*என்பார் சிவப்பிரகாசர். திருவள்ளுவரும்,*

***"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவன் அடிசேரா தார்" (திருக்குறள். 1-10)***

*என்கிறார். உயிர் தனது பக்குவ நிலைக்கு ஏற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளில் நின்று இறைவனை வழிபடுகிறது.*

**சரியை**

*இறைவனது திருக்கோயில் சென்று, உருவத் திருமேனியாய் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு,*

***"தயிலமுடன் ஆனிடத்தைந் தையமுத நறுநெய்பால்***
***தயிர்செழுந்தேன் வயலினெழு கரும்புடைத்துக் கொள்சாறு***
***பழம்பிழிந்த மதுரச்சாறு புயலளவு தழையிள நீர்நறுஞ்சந்***
***தனக்குழம்பு போற்றுநூலின் இயலினமை தபனமிவை***
***யொன்றன்பி னொன்று முறை யிறைவற்காட்டி" (பிரபுலிங்க லீலை, 4.43)***

*முதலியன கொண்டு நீராட்டி, பூச்சூட்டி, உணவு படைத்து வழிபடுதல் ஆகும்.*

**கிரியை**

*இறைவனது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைப் புறத்தாலும், அகத்தாலும் வழிபடும் முறையாகும்.*

**யோகம்**

*ஐம்பொறிகளின்வழி செல்லும் மனதை மூச்சுப் பயிற்சி முதலானவற்றால் அடக்கி, சோதி வடிவினான இறைவனை மனதால் ஒருமையுடன் நினைத்திருக்கும் நிலையே யோக நிலை ஆகும்.*

*இந்நிலையை,*

***"வாயு நிற்க மனமும் உடனிற்கும்***
***தோய நின்குறின் நிற்கும் துரும்புமே" (பிரபுலிங்க லீலை, 18.16)***

*என்பர். மேற்கூறிய மூவகை நெறி நின்று வழிபடும்போது உள்ளம் தூய்மை அடைகிறது.*

**ஞானம்**

*மனம் தூய்மையோடு இருந்தால்தான் மெய்யுணர்வு தோன்றும்.*

***"அநதக் கரண அறிவை அறிதற் சாதனம்" (பிரபுலிங்க லீலை, 24.12)***

*என்பர். இந்நிலையில் இறைவனே ஆசிரியனாக வந்து மெய்யறிவை உணர்த்துவார். அவ்வழி நின்று வீடுபேறு அடைதலே ஞானநெறி ஆகும். ஞானம் ஒன்றே வீட்டின்பத்தை அடைதற்குரிய*

*நேரான வழி. ஏனையவை ஞானம் பெறுவதற்குரிய வழிகளே ஆகும்.*

***"உரைசெயிற் பரம ஞானம் ஒன்றுமே முத்திக்கேது***
***சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான***
***மருவுதற் கேது என்று மறைபுகன் நுரைக்கும்"*** ***(பிரபுலிங்க லீலை, 13.69)***

*என்பார் சிவப்பிரகாசர். தாயுமானவரும் இக்கருத்தை,*

***"விரும்பும் சரியைமுதல் மெஞ்ஞானம் நான்கும்***
***அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே"*** ***(பிரபுலிங்க லீலை, 157)***

*என்று வலியுறுத்துகிறார்.*

**அறக்கருத்துகள்**

*நல்வினை செய்யும் உயிர்களுக்கே மக்கட்பிறவி கிடைக்கும். அதிலும் உயிர்கள் மறுமைப் பயன் கருதாது தீவினைகள் செய்வதுண்டு.*

***"புன்மர நெளிபுழுப் புள்வி லங்கெனும்***
***பன்மைய துயர்செயும் பாவங்கள் தப்பியே***
***வன்மைகொள் நிலமிசை மக்கள் ஆகுதல்***
***நன்மைகொள் உயிர்க்கல்லால் அரிது"*** ***(பிரபுலிங்க லீலை, 16.10)***

*என்பர். இந்நிலையறியாது பல பாவங்களைச் செய்கிறது. அவற்றுள் 'வந்த உறவினர்களை விடுத்து தான் உணவு அருந்துதலும், பந்தியில் வேறு படைத்தலும், தாய் தந்தை பசித்திருக்க உணவுண்ணுதலும், பசியால் வருவோரை வருத்துதலும், ஊன் உண்பதும், உண்ணுவிப்பதும், கன்றுக்கு பால் விடாமல் கறத்தலும், அடைக்கலம் புகுந்தோரைக் காவாது விடுதலும், பெற்றோர் உரைக்காவாது விடுதலும், புறங்கூறுதலும், பிறன்மனை நயத்தலும், நட்புக்காலத்து அறிந்த மறைபொருளை பகைக்காலத்தே வெளியிடுதலும், நட்பினைப் பிரித்தலும், பிறர் பொருள் கொண்டு அறம் செய்தலும்' இவைபோன்ற பிறவும் மிகக் கொடிய பாவங்கள் ஆகும்.*

*மறுமைப் பயன் தேடாத உடம்பால் பயனில்லை. நிலையற்ற இந்த உடம்போடு இருக்கும் போதே நல்லறங்கள் செய்திடல் வேண்டும்.*

***"எய்தற்கரிய யாக்கைதனக் கெய்திற் றென்றால் அதுகொண்டு***
***செய்தற்கரிய அறங்கள் பலசெய்து துயர்கூர் பிறவியினின்று***
***உய்தற்கொருமை பெறவொண்ணா துழல்வோன் உடம்பு***
***பொற்கலத்தில் பெய்தற்கரிய பால்கமரிற் பெய்த தொக்கும் என்பரால்"***
***(பிரபுலிங்க லீலை, 11.12)***

*என்பர். நல்வினை செய்வோர் பிறவித் துன்பத்தைக் கடந்து இன்புறுவர்.*

**வீரசைவத்தின் சிறப்பு**

*ஆதியும் அந்தமும் இல்லா சிவத்துடன் இரண்டறக் கலந்து நிற்றலே உயிருக்கு மேன்மை தரும் நெறியாகும். மெய்யுணர்வு பெற்ற ஞானிகளும் தமது பழவினைகள் கழிந்த பின்னரே பிறவியிலிருந்து விடுபட இயலும். அந்நிலையில் அவர்களை மீண்டும் பாசம் பற்றாதிருக்க வீர சைவநெறி நிற்றல் வேண்டும். தூய்மை இல்லாத கருவி கரணங்களின் மலமாசுகள் நீங்கும்படி சுத்தனாயிருக்கிற சிவலிங்கப் பெருமானை காரண, சூக்கும, தூல உடம்புகளில் முறையே பிராணலிங்கம், பாவலிங்கம், இட்டலிங்கம் என்று தரித்துக் கொண்டு, உள்ளும்*

*புறமும் உள்ள சிவனை எப்போதும் ங்காதிருத்தலே வீரச சைவநெறி ஆகும். தனது உடம்பு முதலானவற்றையே சிவாலயமாகக் கருதிக்கொண்டு தன்னையே சிவமென்று கருதுபவனுக்குப் பிறப்பு இல்லை.*

***"வானம் அல்லேன் வளியல்லேன் அழல்நீர் அல்லேன்***
***மண்அல்லேன் ஞானம் அல்லேன் வினையல்லேன் நானே***
***சிவமென்றெண்ணினோன் ஊனம் இல்லா ஒருசிவமே ஆவன்"***
***(பிரபுலிங்க லீலை, 25.15)***

*என்பார். இந்நிலையே 'அத்துவிதம்' எனப்படும். இந்நிலையில் நின்று மனம், வாக்கு, காயம் மூன்றிடத்தும் வரும் நுகர்வுகளைச் சிவனுக்குப் படைத்து பின் தான் நுகரும்போது அதனால் வரும் குற்றம் உயிரைப் பாதிக்காது. ஆதலால், ஞானம் பெற்ற உயிர்களும் வீரசைவநெறி நின்ற பின்பே வீடுபேறு எய்தும். இதனை,*

***"புறந்தரு சமயம் புக்குப் புறமலாச் சமயத்தெய்தி***
***அறந்திகழ் சைவ முற்றாங் கதிற்சரி தாதிஆற்றச்***
***சிறந்துள வீரசைவம் சேர்ந்தபின் வீடு நண்ணும்" (பிரபுலிங்க லீலை, 25.12)***

*என்று சிவப்பிரகாசர் வலியுறுத்துகிறார்.*

*இறவாப் புகழுடையவன் இறைவன். அவனது இயல்பு அறியாது உயிர் பொய்ப்பொருளான மாயையோடு பொருந்தி, இருவினை ஈட்டிப் பிறவியில் வீழ்கிறது. இதிலிருந்து விடுபட அறம் பல செய்து, இறையருளால் சரியை முதலான நெறிநின்று ஞானம் பெறுகிறது. இந்நிலையில் இறைவன் உயிருக்குக் குருவாக வந்து மெய்ப்பொருளை உணர்த்துகிறான். மெய்யுணர்வு பெற்ற உயிரை மீண்டும் பிறவிப்பிணி பற்றாமல் இருக்க வீர சைவநெறி நின்று வீடுபேறு அடைதல் வேண்டும்.*

**முடிவுரை**

*சிவப்பிரகாசர் இயற்றிய 'பிரபுலிங்கலீலை' இறைவனின் இயல்புகளை எடுத்துக் கூறுகிறது. இறைவனை வழிபடும் முறைகளைக் கூறுவதுடன் அறக்கருத்துக்களையும் எடுத்துரைக்கிறது. இவற்றுடன் வீரசைவத்தின் சிறப்புகளை எளிமைப்படுத்தி கூறுகிறது. இவற்றின் வழியாகச் சிவப்பிரகாசரின் பக்தி நெயிறினை அறிந்துகொள்ள முடிகிறது.*

**துணை நூற்பட்டியல்**


1. *சிவப்பிரகாசர், பிரபுலிங்க லீலை, மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடுகள், திண்டிவனம்.*
2. *திருமூலர், திருமந்திரம், சைவ சித்தாந்தக் கழக வெளியீடு, சென்னை, 1986.*
3. *தாயுமானவர், பராபரக்கண்ணி, தாயுமானவர் பாடல்கள், மணிவாசகம் பதிப்பகம், சிதம்பரம், 2008.*
4. *மு. வரதராசனார் (உரை), திருக்குறள், பாரி நிலையம், சென்னை, 1989.*


## References


1. Sivaprakasar, Prabhulinga Leelai, Mayilam Bommapura Adheena Publications, Tindivanam.
2. Thirumoolar, Thirumanthiram, Saiva Siddhanta Kazhagam Publications, Chennai, 1986.

3. Thayumanavar, Paraparakanni, Thaayumanavar Songs, Manivasagam Publishing House, Chidambaram, 2008.
4. M. Varadarajanar, Thirukkural, Pari Nilayam, Chennai, 1989.